**BEC REFLECTION**

**April 2016**

**கருப்பொருள் : இரக்கத்தின் புதிய வாழ்வு**

**இலக்கு** : இயேசு கிறிஸ்து தமது மரணம்-உயிர்ப்பு வழியாக நமக்களித்த இரக்கத்தின் புதிய வாழ்வு வாழ, கடவுளின் மக்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**முன்னுரை :** உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடையே இருக்கிறார் என்பதை ஈஸ்தர் காலம் நமக்கு நினைவுறுத்துகிறது. உதவி அல்லது தேவையிலுள்ள நமது எல்லா சகோதர-சகோதரிகள் மீது இரக்கம் காட்ட, இந்த இரக்கத்தின் புனித ஆண்டின் போது நாம் அனைவரும் அழைக்கப்படுகிறோம்.

**பாட்டு:**

**தொடக்கச் செபம்:** அதிச உறுப்பினர்களில் ஒருவரை செபம் செய்ய அழைக்கலாம்.

**1. வாழ்வை நோக்குதல் :**

கடவுள் இரக்கத்தின் வெளிப்பாட்டின் காரணமாக தந்தையால் இயேசு கிறிஸ்து அனுப்பப்பட்டுள்ளார். தீர்ப்பு அளிக்க அல்ல மாறாக மன்னிப்பு வழங்கவும் இரக்கம் காட்டவும் கிறிஸ்து வந்தார். நம்மிடையே அவர் இருப்பதைக் காண்பதே பேரிரக்கம். உயிருள்ள கடவுளின் மகன் என பேதுரு சாட்சியமளிக்கச் செய்வதது அதிலும் பேரிரக்கம். மனிதன் செய்யும் எந்தவொரு பாவம் கடவுளின் இரக்கத்தை அழித்து விடமுடியாது. அவரை நோக்கி நாம் செபித்தால் மகிமை நிறைந்த அவரது சக்தி பொழியப்படுவதை யாராலும் தடுக்க முடியாது. பிணையாக அடிமையை அனுப்பாமல் தமது மகனையே பலி கொடுத்த தந்தையின் அன்பை பாவத்தால் மறைக்க முடியாது. நமக்கு மீட்பு அளிப்தே, நம் மீது அவர் காட்டும் இரக்கம். புது வாழ்வை வழங்கி அதன்படி வாழ கோரிக்கை விடுக்கும் தூய ஆவியின் கொடையில் அது முழுமைப் பெறுகிறது, இரக்கம். மனித பலவீனத்தாலும் பாவத்தாலும் எத்தனை பெரிய தடைகள் வந்தாலும், பூமியைப் புதுப்பிக்கும் ஆவியால் நன்மையே பிறக்கும். அது அதிசயத்தை ஏற்படுத்தும். இந்த புதுப்பித்தல், நல்லதை, உன்னதமானதை, அழகானதை செய்வதற்கு ஆற்றல் அளிக்கும். இரக்கத்தின் கொடையிலிருந்து துளிர் விடுவது இவை. இதுவே பொய்மையின் அடிமையிலிருந்து விடுதலை அளித்து, இனி பாவம் செய்யாமல் இருப்பதற்கான வலிமையையும் வழங்குகிறது. புதுவாழ்வின் கொடையால், இயேசு தமது அன்பை நம்மோடு பகிர்ந்து கொண்டு, தந்தையிடம் நம்மை உள்ளன்போடு இட்டுச் செல்கிறார்.

(புனித இரண்டாம் ஜோன் பவுல் எழுதிய உண்மையின் ஜோதி (Veritatis Splendor) என்ற சுற்றுமடல்)

**சிந்தனை :** கடவுள் நம் மத்தியில் இருப்பதே எல்லாவற்றுக்கும் மேலான இரக்கம். உங்களின் அன்றாட வாழ்வில் கடவுளின் இரக்கத்தை எவ்வாறு நீங்கள் அனுபவிக்கிறீர்கள்?

**2. இறைவார்த்தை :** நற்செய்தி வாசகம் (லூக்கா 19 : 1 – 10)

இயேசு எரிகோவுக்குச் சென்று அந்நகர் வழியே யோப்க் கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்குத் தலைவர். இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார். மக்கள் திரளாய்க் கூடியிருந்ததால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில் சக்கேயு குட்டையாய் இருந்தார். அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார். இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம், "சக்கேயு, விரைவாய் இறங்கிவாரும், இன்று உமது வீட்டில்தான் தங்க வேண்டும்" என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார். இதைக் கண்ட யாவரும், "பாவியிடம் தங்கப் போயிருக்கிறாரே இவர்" என்று முணுமுணுத்தனர். சக்தேயு எழுந்து நின்று, "ஈஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன், எவர் மீதாவது பொய்க்குற்றம் சமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று அவரிடம் கூறினார். இயேசு அவரை நோக்கி, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று, ஏனெனில் இவரும் ஆபிராமின் மகனே, இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" என்று சொன்னார்.

**சிந்தனை:**

- இந்த வாசகத்தில் உள்ளத்தைத் தொட்ட வார்த்தைகள் அல்லது வசனத்தை எடுத்துக் கொள்ளவும். பக்தியோடு இடைவெளி விட்டு, அதனை மூன்று முறை சொல்வோம்.
- நீங்கள் தேர்வு கொண்ட வார்த்தைகளைச் செவிமெடுக்க இரண்டு நிமிடம் மௌனம் காக்கவும்
- உங்களைத் தொட்ட வார்த்தைகள் அல்லது வசனத்தின் மூலம் கடவுள் உங்களுக்கு என்ன சொல்கிறார் என்பதை பகிர்ந்து கொள்ளவும்.

**3. அன்பில் வாழ்தல்**

இரக்கத்தின் புதிய வாழ்வை கடவுள் நமக்குத் தந்துள்ளார். தனிநபர், குடும்பம், அதிச உறுப்பினர் என்ற முறையில் இரக்கத்திற்கு எவ்வாறு சாட்சிகளாக இருக்கப் போகிறோம்?

**இறுதிச் செபம்**: இறுதிச் செபம் சொல்வதற்கு மற்றொரு உறுப்பினரை அழைக்கவும்